அவசரக்கூட்டம்

வேதாரண்யம் நகராட்சியின் **2021-ம்** ஆண்டு **நவம்பர் மாதம்** 19 **ம் நாள் வெள்ளிக்கிழமை** காலை 11.00 மணிக்கு நடைபெற்ற **அவசரக்கூட்ட** நடவடிக்கைகள்.

**முன்னிலை திருமதி வி. ஹேமலதா B.A.,**

தனிஅலுவலர்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| **19.11.2021** | **பொருள் எண்.1**<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.21191/2021 அம்ருத் 2/ நாள்.13.11.2021ன்படி 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020-21ன்கீழ் Un-Tied Grant-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.134.15 லட்சத்தில் நிலுவையிலுள்ள குடிநீர் கட்டணம் மற்றும் மின்கட்டணம் ஆகியவை ரூ.32.00 லட்சம் இருப்பதால் அதற்கு நிதி ஒதுக்கியது போக மீதமுள்ள தொகை ரூ.102.15 லட்சத்திற்கு பணிகள் தேர்வு செய்து குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 17 பணிகள் தேர்வு செய்யப்பட்டு 7 பணிகள் ஒவ்வொன்றும் தலா ரூ.10.00 இலட்சம் வீதம், 5 பணிகள் ஒவ்வொன்றும் தலா ரூ.1.95 இலட்சம் வீதம், 2 பணிகள் ஒவ்வொன்றும் தலா ரூ.2.85 இலட்சம் வீதம், மற்றொரு பணி ரூ.3.00 இலட்சமும், மற்றொரு பணி ரூ.4.40 இலட்சமும், மற்றொரு பணி ரூ.9.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.102.15 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண். 140**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எ. | சாலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.18-ல் மறைஞாயநல்லூர் பள்ளி அருகில் சிமெண்ட் சாலை 180 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும்பணி | 10.00 |
| 2 | வார்டு எண்.18-ல் மறைஞாயநல்லூர் பள்ளி தென்புறம் சிமெண்ட் சாலை 52 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும்பணி | 3.00 |
| 3 | வார்டு எண்.2 சின்னசாலையில் 125 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் அமைக்கும்பணி | 10.00 |
| 4 | வார்டு எண்.7 சன்னதி கடற்கரை ரயில்வே லைன் முதல் சங்கர மாரியம்மன்கோயில் வரை 70 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் கட்டும்பணி | 10.00 |
| 5 | வார்டு எண்.7 நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடைக்கு செல்லும் சாலையின் எதிர்புறம் 65 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் கட்டும்பணி | 9.30 |
| 6 | வார்டு எண்.7 பொன்னாங்கொல்லைக்கு செல்லும் சாலையின் ஓரத்தில் 70 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் கட்டும்பணி | 10.00 |

| | | |
|---|---|---|
| 7 | வார்டு எண்.16 செங்காதலை சாலையில் பிள்ளையார் கோயில் எதிர்புறம் 37 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் அமைக்கும்பணி | 10.00 |
| 8 | வார்டு எண்.17 வடமழை ரஸ்தாவில் சொக்கையன் பிரேமா கல்யாணமண்டபம் அருகில் 125 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் கட்டும்பணி | 10.00 |
| 9 | வார்டு எண்.19 அருள்மிகு ஸ்ரீ மேலமறைக்காட்டு ஈஸ்வரர் கோயில் செல்லும் சாலையில் 37 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் கட்டும்பணி | 10.00 |
| 10 | வார்டு எண்.2 சின்னச்சாலையில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 6.00 m x 0.90 went ) | 1.95 |
| 11 | வார்டு எண்.6 அரசு மருத்துவமனை சாலையில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 6.00 m x 0.90 went ) | 1.95 |
| 12 | வார்டு எண்.7 முதலியார் குளத்தெருவில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 7.00 m x 1.20 went ) | 2.85 |
| 13 | வார்டு எண்.17 வடமழைரஸ்தா சொக்கையன் பிரேமா திருமண மண்டபம் அருகில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 6.00 m x 0.90 went ) | 1.95 |
| 14 | வார்டு எண்.17 நேருநகரில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 6.00 m x 0.90 went ) | 1.95 |
| 15 | வார்டு எண்.20 நல்லத்தான்காடு தெத்தேரியில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 7.00 m x 1.20 went ) | 2.85 |
| 16 | வார்டு எண்.20 மன்னப்பையன்கட்டளை சாலையில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி ( 6.00 m x 0.90 went ) | 1.95 |
| 17 | வார்டு எண்.21 தோப்புத்துறை மாரியம்மன்கோயில் சாலையில் ஆர்.சி.சி. கல்வர்ட் அமைக்கும் பணி (7.00 m x 0.90 went) | 4.40 |
| | **கூடுதல்** | **102.15** |

மேற்கண்ட 17 பணிகளுக்கு நிர்வாக அனுமதி, நகராட்சியின் நிர்வாக அனுமதி வரம்பிற்குள் வருவதால், தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட 17 எண்ணிக்கை பணிகள் ஒவ்வொன்றிற்கும், தனித்தனியாக குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 19.11.2021 | **பொருள் எண்.2**<br><br>வேதாரண்யம் நகராட்சி 36.26 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட் 21 வார்டுகளை உள்ளடக்கிய இரண்டாம் நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 34266 ஆகும். வேதாரண்யம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க எண். 21787/2021/EA2 நாள். 02.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி பணியாளர்கள் மற்றும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண். 141**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண். | பணியாளர்களின் விவரம் | தேவைப்படும் பணியாளர்களின் | அடிப்படை ஊதியம் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு (ரூ) | மொத்தம் வருட ஊதியம் (ரூ.லட்சத்தில்) | மொத்த ஒப்புதலை (EPF, ESI, EPF admin, EDLI மற்றும் நிர்வாக கட்டணம் ஆகியவைகளை சேர்த்து (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர் | 71 | 461 | 117.83 | 184.76 |
| 2 | ஒட்டுநர் | 7 | 708 | 17.84 | |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 10 | 562 | 20.23 | |
| 4 | குடிநீர் பணியாளர்கள் | 5 | 581 | 11,66 | 11.66 |

மேற்கண்ட எண்ணிக்கையிலாகன பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்தி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகளை மேற்கொள்ள 1 வருடத்திற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.196,42 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** 1 .மன்றம் அனுமதி வழங்கலாம்

2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| 19.11.2021 | **பொருள் எண்.3**<br>வேதாரண்யம் நகராட்சியில் நடைபெற உள்ள சாதாரண நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021 க்குரிய வாக்குச்சாவடி பட்டியல் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது,<br>அலுவலக குறிப்பு மன்றம் பதிவு செய்ய ஒப்புதல் வழங்கலாம். | **தீர்மான எண். 142**<br>பதிவு செய்யப்பட்டது. |
| 19.11.2021 | **பொருள் எண்.4**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.21191/2021 அம்ருத்.2/ | **தீர்மான எண். 143**<br>அனுமதிக்கப்பட்டது. |

நாள்.13.11.2021ன்படி 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-22ன்கீழ் Tied Grant-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.82.00 லட்சம் ஆகும். இவற்றில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின்கீழ் ரூ.32.50 லட்சத்திற்கு 4 எண்ணிக்கை பணிகளும், ரூ.15.00 லட்சத்திற்கு 3 எண்ணிக்கை குடிநீர் பணிகளும், ரூ.25.50 லட்சத்திற்கு 3 எண்ணிக்கை தடுப்புசுவர் அமைக்கும் பணிகளும், ரூ.10.00 லட்சத்திற்கு 2 எண்ணிக்கை நடைபாதை பணிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. Tied Grant-ன்கீழ் 12 பணிகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றின் மொத்த மதிப்பீடு ரூ.83.00 லட்சம் ஆகும்.

Un-Tied Grant-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.56.00 லட்சத்திற்கு ரூ.6.90 லட்சத்திற்கு 3 எண்ணிக்கை ஆர்.சி.சி. சிறுபாலம் அமைக்கும் பணிகளும், ரூ.49.85 லட்சத்திற்கு 5 எண்ணிக்கை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கும் ஆகக்கூடுதல் தொகை ரூ.56.75 லட்சத்திற்கும் பணிகள் தேர்வு செய்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் Tied Grant மற்றும் Tied Grant-யும் சேர்த்து ரூ.139.75 லட்சத்திற்கு கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ. | சாலையின் பெயர் | எண்ணி-க்கை | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| **Un-Tied Grant** | | | |
| 1 | வார்டு எண்.17 காந்தி நகரில் ஆர்.சி.சி. சிறுபாலம் அமைக்கும்பணி | 2 | 3.90 |
| 2 | வார்டு எண்.17 காந்தி நகர் மெயின் ரோட்டில் ஆர்.சி.சி. சிறுபாலம் அமைக்கும்பணி | 1 | 3.00 |
| | **கூடுதல்** | **3** | **6.90** |
| 3. | வார்டு எண்.17 நேரு நகரில் 125 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும்பணி | 1 | 10.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 4. | வார்டு எண்.17 காந்திநகரில் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு பின்புறம் உள்ள சாலையில் 115 மீட்டர் நீளத்திற்கு மழைநீர்வடிகால் அமைக்கும் பணி | 1 | 10.00 | | |
| | 5. | வார்டு எண்.17 காந்தி நகர் பள்ளிக்கு தென்புறம் 115 மீட்டர் நீளத்திற்கு மழைநீர்வடிகால் அமைக்கும் பணி | 1 | 10.00 | | |
| | 6. | வார்டு எண்.21 தோப்புத்துறை மாரியம்மன்கோயில் மேல்புறம் 125 மீட்டர் நீளத்திற்கு மழைநீர்வடிகால் அமைக்கும் பணி | 1 | 10.00 | | |
| | 7. | வார்டு எண்.21 தோப்புத்துறை வரதகோனார் சாலை மேற்குபுறம் 120 மீட்டர் நீளத்திற்கு மழைநீர்வடிகால் அமைக்கும் பணி | 1 | 9.85 | | |
| | | **கூடுதல்** | **5** | **49.85** | | |
| | | **மொத்த கூடுதல்** | **8** | **56.75** | | |

| | | | |
|---|---|---|---|
| **Tied Grant** | | | |
| 1 | இலகு ரக வாகனம் - 1 எண்ணிக்கை | 1 | 8.25 |
| 2 | இலகு ரக வாகனம் - 1 எண்ணிக்கை | 1 | 8.25 |
| 3 | இலகு ரக வாகனம் - 1 எண்ணிக்கை | 1 | 8.25 |
| 4 | பிளாஸ்டிக் கட்டும் இயந்திரம் (2 to 3 Tonne Capacity machine) | 1 | 7.75 |
| | **கூடுதல்** | **4** | **32.50** |
| 5. | வார்டு எண்.3 ஆறுகாட்டுத்துறை தரைமட்ட தொட்டியில் குளோரினேஷன் பிளாண்ட் மற்றும் ஆர்.சி.சி. ஷெட் அமைக்கும்பணி | 1 | 5.00 |
| 6. | வார்டு எண்.10 அகஸ்தியன்பள்ளி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் குளோரினேஷன் பிளாண்ட் மற்றும் ஆர்.சி.சி. ஷெட் அமைக்கும்பணி | 1 | 5.00 |
| 7. | வார்டு எண்.13 கைலவனம்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் குளோரினேஷன் பிளாண்ட் மற்றும் ஆர்.சி.சி. ஷெட் அமைக்கும்பணி | 1 | 5.00 |
| | **கூடுதல்** | **3** | **15.00** |
| 8. | வார்டு எண்.12 ஸ்ரீ பக்தர்குளம் மாரியம்மன்கோயில் குளத்தில் 37 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் அமைக்கும்பணி | 1 | 10.00 |
| 9. | வார்டு எண்.12 ஸ்ரீ பக்தர்குளம் மாரியம்மன்கோயில் குளத்தில் 20 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் அமைக்கும்பணி | 1 | 5.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 10. | வார்டு எண்.14 ஆனைவிழுந்தான்குளத்தில் 37 மீட்டர் நீளத்திற்கு தடுப்புசுவர் அமைக்கும்பணி | 1 | 10.00 | |
| | | **கூடுதல்** | **3** | **25.50** | |
| | 11. | வார்டுஎண்.12 ஸ்ரீ பக்தர்குளம் மாரியம்மன்கோயில் குளத்தில் படித்துறை அமைக்கும்பணி | 1 | 5.00 | |
| | 12. | வார்டு எண்.14 டி.டி.பி. சாலை ஆனைவிழுந்தான்குளத்தில் படித்துறை அமைக்கும்பணி | 1 | 5.00 | |
| | | **கூடுதல்** | **2** | **10.00** | |
| | | **மொத்த கூடுதல்** | **12** | **83.00** | |

**சுருக்கம்**

| வ.எ. | திட்டம் | நிதி ஒதுக்கீடு ரூ. லட்சத்தில் | தேர்வு செய்யப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | Un-Tied Grant | 56.00 | 8 | 56.75 |
| 2. | Tied Grant | 82.00 | 12 | 83.00 |
| | **Total** | **138.00** | **20** | **139.75** |

மேற்கண்டவாறு 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-22 Tied Grant-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.82.00 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.1.00 லட்சத்தினையும், Un-Tied Grant-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.56.00 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.0.75 லட்சத்தினையும் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

.அலுவலக குறிப்பு அ. மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேலும், 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021-22 Tied Grant-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.82.00 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.1.00 லட்சத்தினையும், Un-Tied Grant-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.56.00 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.0.75 லட்சத்தினையும் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **19.11.2021** | **பொருள் எண்.5**<br><br>வேதாரண்யம் நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் நகர்மன்ற கூடம் கஜா புயலினால் முற்றிலுமாக பழுதடைந்துள்ளது. நகராட்சிகளுக்கு விரைவில் தேர்தல் நடத்துவது குறித்த | **தீர்மான எண். 144**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.700/2021 அ3 நாள்.18.11.2021-ல் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கிணங்க, கஜா புயலின் தாக்கத்தினால் பழுதடைந்துள்ள இந்நகராட்சி அலுவலக கட்டித்தின் முதல் தளத்தில் உள்ள நகர்மன்ற கூடம், நகர்மன்ற தலைவர் அறை ஆகியவை சரிசெய்து நகர்மன்ற அறையிலுள்ள இருக்கைகள், ஒலிபெருக்கி கருவிகள் மற்றும் இதர வசதிகளுடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.<br>மேலும் நகர்மன்ற கூட்டம் நடைபெறும் போது அதில் கலந்து கொள்ளும் நகர்மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் அமர்ந்து கூட்ட நடவடிக்கைகளை கவனிக்க தேவையான "U" வடிவிலான டேபிள்கள் மற்றும் இருக்கைகள் தயார் செய்ய வேண்டியுள்ளது. மேலும் கூட்ட அரங்கில் அலங்கார வடிவமைப்புகள், அலுமினிய அறை தடுப்பு (பார்ட்டீசியன்), palceilng பணி மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சம் ஆகும். இச்செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |

தனி அலுவலர்/ஆணையர்
வேதாரண்யம் நகராட்சி.

சாதாரணக்கூட்டம்

வேதாரண்யம் நகராட்சியின் 2021-ம் ஆண்டு **நவம்பர் மாதம்** 30 **ம் நாள் செவ்வாய்கிழமை** மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்ட** நடவடிக்கைகள்.

**முன்னிலை திருமதி வி. ஹேமலதா B.A.,**

தனிஅலுவலர்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.11.2021 | **பொருள் எண்.1**<br>நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் 2021- ம் மாதத்திற்கான (22.11.2021 முதல்) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மான எண். 145**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| 30.11.2021 | **பொருள் எண்.2**<br>வேதாரண்யம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகள், பிரிண்டர்கள் மற்றும் அதைச்சார்ந்த உபகரணங்கள் பராமரிப்பு, பிரிண்டர் டோனர் வழங்குதல், Refill செய்தல் போன்ற பணிக்கு 2019-2020 ம் ஆண்டிற்கு ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள (AMC) நகர்மன்ற தீர்மான எண் 17, நாள். 28.02.2019-ல் ஒப்புதல் பெறப்பட்டு மெசர்ஸ் சரஸ்வதி கம்பியூட்டர்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்ட 2020-2021 நிதியாண்டிற்கும் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகித அடிப்படையில் ஒப்பந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021 நடைபெற உள்ளதால் நகல் எடுத்தல் போன்ற பணிகள் அத்தியாவசியமாகிறது. எனவே மேற்படி நிறுவனம் வழங்கிய 2019-2020 ம் ஆண்டின் அதே விலை விகிதத்தில் நடப்பு நிதியாண்டில் பணி மேற்கொள்ள சம்மதித்ததையடுத்து பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ. 1.00 (ஒரு இலட்சம்)-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 146**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 30.11.2021 | **பொருள் எண்.3**<br>வேதாரண்யம் நகராட்சியின் எல்லைகளை Auto Cadd-ல் Google Map பயன்படுத்தி நகரின் புதிய | **தீர்மான எண். 147**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | வரைபடம் வரைந்து சாலைகளை குறிப்பிட்டு நகராட்சியில் உள்ள குளங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோவில்கள், கடற்கரைகள் போன்றவைகளை வரைபடமாக தயார் செய்த வகையிலும், நகராட்சியின் எல்லை வரைபடத்தில் உள்ள சாலைகளை தார்சாலை, சிமெண்ட் சாலை, மண் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகளை பிரித்து தனி வண்ணமிட்டு சாலைகளுக்கு Unicode உடன் எண் குறிப்பிட்டு Auto caddல் சாலை வரைபடம் தயார் செய்த வகையிலும், மேற்கண்ட சாலைகளுக்கு வரைபடம் திருத்தி தயார் செய்த வகையிலும், நகராட்சியின் எல்லை வரைபடத்தில் வார்டு வாரியாக குடிநீர் விநியோகம் செய்யப்படும் இடங்களில் உள்ள குடிநீர் இணைப்பு பெறப்பட்ட வீடுகளை குறிப்பிட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் வழங்கப்பட்ட வண்ணத்தை திருத்தி வண்ணமிட்டு காட்டுவதற்கு 21 வார்டுகளுக்கும் Auto Cadd குடிநீர் இணைப்பு வரைபடம் தயார் செய்த வகையிலும், நகராட்சியின் எல்லை வரைபடத்தில் சாலைகளை குறிப்பிட்டு நகராட்சியில் உள்ள குளங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோயில்கள், கடற்கரைகள் போன்றவைகளை Auto Cadd-ல் நிர்வாக வரைபடம், குடிநீர் வழங்கல் வரைபடம், கழிவுநீர் வரைபடம், நீர்நிலைகள் வரைபடம் ஆகிய வரைபடங்களை தயார் செய்த வகையிலும், நகராட்சியின் எல்லை வரைபடத்தில் சாலைகளை குறிப்பிட்டு நகராட்சியில் உள்ள குளங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கோயில்கள், பகடற்கரைகள் போன்றவைகளை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளின்படி Auto Cadd-ல் நிர்வாக வரைபடம், குடிநீர் வழங்கல் வரைபடம், கழிவுநீர் வரைபடம், நீர்நிலைகள் வரைபடம் ஆகிய வரைபடங்களை தயார் செய்த வகையிலும், மேற்கண்ட வரைபடங்களை A2, A0 -ல் Print எடுத்த வகையில் மொத்த தொகை ரூ.60,000/-ம் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் பொறுப்பில் உள்ள திருமதி. மு. மரகதம் என்பரால் மேற்கொள்ளப்பட்டது. எனவே இத்தொகையினை திருமதி மு. மரகதம் என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.11.2021 | **பொருள் எண்.4**<br><br>வேதாரண்யம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண்.TN51AH8239 பழுதுற்றுள்ளதால் பழுது நீக்கம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. அப்பணி மேற்கொள்ள கீழ்கண்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.<br>1. அன்னை மாருதி சர்வீஸ் ஸ்டேஷன், வேதாரண்யம் - ரூ.22,500/-<br>2. என்.சேகர், ஸ்ரீ விஜி டீசல் ஒர்க்ஸ், தேத்தாக்குடி தெற்கு - ரூ.20,690/-<br>3. கன்மலை ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், தோப்புத்துறை - ரூ.21,800/-<br>மேற்கண்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றதில் "திரு.என். சேகர், ஸ்ரீ விஜி டீசல் ஒர்க்ஸ், தேத்தாக்குடி தெற்கு" என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண். 148**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.11.2021 | **பொருள் எண். 5**<br>வேதாரண்யம் நகராட்சியில் கசடு, கழிவு மேலாண்மை திட்டம் FSTP வரைவு உபவிதிகள் மாவட்ட அரசிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்திட வேண்டி மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பியதில் புதுக்கோட்டை அரசு கிளை அச்சக கிளை மேலாளர் கடித ந.க.எண்.95/2திட்டம்/2021 நாள்.12.11.2021-ன் படி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் FSTP வரைவு உபவிதிகளை அரசாணை (நிலை) எண்.105 செய்தி மற்றும் சுற்றுலா (எ.அ.2)த்துறை, நாள். 10.06.2003-ன்படி பிரசுரக்கட்டணம் A4 அளவு பக்கம் ஒன்றுக்கு ரூ.2100/- வீதம் தமிழில் 21 பக்கம் ரூ.44000/-ம் ஆங்கிலத்தில் 21 பக்கம் ரூ.44000/-ம் ஆகக்கூடுதல் தொகை ரூ.88200/- ஐ “0058 00 Stationery and Printing 200 other Press Receipts – AA Cost of Printing work done for other Govt.Departments 0058 00 200 AA 3925” என்ற தலைப்பில் செலுத்தி அசல் செலுத்துச் செலானை புதுக்கோட்டை அரசு கிளை அச்சக கிளை மேலாளர் அவர்களுக்கு அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.88200/-ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். இப்பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு இச்செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 149**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 30.11.2021 | **பொருள் எண். 6**<br>வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் SML – TN51J-1570 டிப்பர் வாகனத்தின் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. பொதுசுகாதார பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.70000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி வாகனத்தின் பராமரிப்பு பணிமேற்கொள்ள தகுதியான நிறுவனங்களிடமிருந்து குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மான எண். 150**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

30.11.2021

**பொருள் எண். 7**

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 **(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)** விதி 5, துணை விதி (1) ன் மூலம் வேதாரண்யம் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக **(Electronic Service Delivery System)** அமைப்பின் கீழ் **https://tnurbanepay.tn.gov.in/** என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கானவிண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர் இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |

**தீர்மான எண். 151**

**ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| | | v | தொழிற்சாலை பயன்பாடு பாதாள சாக்கடை இணைப்புக்கான தடையின்மை சான்று<br>NOC for UGD Connection for Industrial |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணி முன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment |
| | | iv | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம்<br>Layout Approval Payment |
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Building | | |
| | | | viii | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிம கட்டணம் Planning Permission with Building License Payment | | |
| | | | ix | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்கு கீழ்) Planning Permission with Building License (Below12 mts) | | |
| | | | x | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்கு கீழ்) Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | | |
| | | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு Registration of Professionals/Developers | | |
| | | | xii | தொழில் வல்லுநர் / டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு Registration of Professional / Developers Certificate | | |
| | | | xiii | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை Renewal Building Plan Request | | |
| | | | xiv | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம் Renewal Building Plan Payment | | |
| | | | xv | தொழில் வல்லுநர்கள்/ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம் பதிவு – தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் – தேடல்<br>Trade Renewal – Search | |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரிவிதிப்பு முழு விவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை மீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

**அலுவலக குறிப்பு :** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**( ந.க.எண் : 2168/C1/2021 )**

தனி அலுவலர்/ஆணையர்
வேதாரண்யம் நகராட்சி.